1993 டிசம்பர் 30]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளம், பெருமழையின் காரணமாகத் தமிழகம் முழுவதும் இருக்கின்ற அனைத்துச் சாலைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த அரசு நன்றாக அறியும். ஏறத்தாழ 196 கோடி ரூபாய்க்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நம்முடைய அரசு மத்திய அரசிடத்திலே தெரிவித்திருக்கிறது. ஆனால் நிதி ஆதாரங்கள்தான் அங்கிருந்து வரவில்லை. ஆனால் நம்மைப் பொறுத்த மட்டிலே அவர்கள் ஓரளவுக்கு உதவி செய்தாலும் நமக்கு நிறைய தேவையிருக்கிறது. பாதிப்பு என்பது ஓரேயடியாக மாநிலம் முழுவதும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் தத்தம் தொகுதியிலே ஏற்பட்டிருக்கிற இழப்பினை இந்த அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒரு ஆய்வினை எடுத்து கிட்டத்தட்ட 196 கோடி ரூபாய்க்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று நாங்கள் மதிப்பிட்டு நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில், உடனடியாக நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு முதலிலே 5 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். தற்போது 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் இந்த வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு இப்போது சில இடங்களிலே பேட்ச் ஓர்க் போடுகிறோம். ஆனால் தொடர்ந்து மழை வந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான் தொடர்ந்துக் பணி செய்ய முடியவில்லை. ஏனென்றால், பேட்ச் ஓர்க் செய்து, மறுபடியும் மழை வந்தால் அந்தச் சாலைகள் பழுதுபட்டுப் போகும். இந்த மாத இறுதிக்குள் மழைக் காலம் முடிந்துவிடும் என்று நினைக்கிறோம். தற்போது பேட்ச் ஓர்க் செய்யப்பட வேண்டுமென்று அதிகாரிகளை அறிவுறுத்தியிருக்கிறோம். எங்காவது, அவ்வாறு பணிகள் நடைபெறவில்லை என்றால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் மழைக்காலம் முடிந்த 15 நாட்களுக்கு, போர்க்கால அடிப்படையில் நிதி ஆதாரங்களைத் திரட்டி. எப்படியும், எல்லாச் சாலைகளையும் சீரமைக்க வேண்டுமென்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு இட்டிருக்கிறார்கள். அந்தப் பணிகளை இந்த அரசு மிக விரைவாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 88, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

[1993 டிசம்பர் 30

88—

**கிளிஞ்சல்களை மூலப்பொருளாகக் கொண்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சிறுதொழிற்சாலை அமைத்தல்.**

*15481—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் கடற்கரையோர கிராமங்களில் கிடைக்கும் கிளிஞ்சல்களை மூலப்பொருளாகக் கொண்டு, சிறு தொழிற்சாலைபடித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களைக் கொண்டு ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : ஊரகத் தொழில்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதியில் கடலோர கிராமங்களில் கிடைக்கும் கிளிஞ்சல்களை மூலப் பொருளாகக் கொண்டு சிறு தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டப் பிரேரணை ஏதும் அரசிடம் இல்லை.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியில் கடற்கரை ஓரத்தில் மீனவர் கிராமங்கள் அதிகமாக இருக்கின்றன. கடற்கரை யோரம் என்பதால் கிளிஞ்சல்கள் அதிகமாகக் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, கிளிஞ்சல்களை மூலப் பொருளாகக் கொண்டு சிறுதொழிற்சாலையை ஏற்படுத்து வதற்கு, அதுவும் படித்து வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்களைக் கொண்டே ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிளிஞ்சல் சுண்ணாம்பு என்பது உயர்தர கால்சியம் கார்பனேட் ஆகும். ரப்பர், பிளாஸ்டிக், வர்ணங்கள், காகிதம், பற்பசை தயாரித்தல், வெள்ளையடித்தல், போன்றவை கள் பல்வேறு மூலப் பொருள்களை வைத்து சிறு தொழிற் சாலை மூலம் தயாரிக்கப்படுகின்றன. அம்மாதிரியான திட்டம் இப்பொழுது அரசிடம் இல்லை. படித்த இளைஞர்கள் இம்மாதிரியான தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு முன் வருவார்களேயானால் மாவட்டத் தொழில் மையம் மூலமாக அவர்களுக்கு எல்லாவித உதவியும் அளிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS